بسم الله الرحمن الرحيم



## திருக்குர்ஆன் மாநில மாநாடு ஏன்? எதற்கு?

# தலாக் சட்டத்தில் தலையீடு! தட்டிக்கேட்க ஒரு மாநாடு!



வருகின்ற ஜனவரி 27, 2019ல் விழுப்புரத்தில் இன்ஷா அல்லாஹ் நடைபெறவிருக்கும் மனித குல வழிகாட்டி திருக்குர்ஆன் மாநாட்டிற்கு அவசியம் என்ன? என்ற கேள்வி இயல்பாக உங்கள் உள்ளத்தில் எழாமல் இருக்காது.

அந்தக் கேள்விக்கு விடையளிக்கும் விதமாக இந்த ஆக்கம் உங்கள் கனிவான கவனத்திற்குத் தரப்படுகின்றது.

மனித குல வழிகாட்டி திருக்குர்ஆன் மாநாடு, திருக்குர்ஆனின் போதனைகளை உலகம் முழுவதும் பரப்புவதையும், முஸ்லிம்களையும் முஸ்லிம் அல்லாதோரையும் குர்ஆன் கூறக்கூடிய உண்மையான மறுமை வாழ்வை நோக்கி அழைப்பதையுமே மைய நோக்கமாகக் கொண்டுள்ளது. இது குறித்து பொதுக்கூட்டங்கள், வழிப்புணர்வுப் பேரணிகள், தெருமுனைக் கூட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் தமிழகமெங்கும் தவ்ஹீத் ஜமாஅத் வீரியமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றது.

எனினும் தற்கால அரசியலைக் கவனத்தில் கொண்டு மற்றொரு முக்கியமான நோக்கமும் இந்த மாநாட்டிற்கு உள்ளது. இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் குர்ஆன் கூறும் கூறும் முத்தலாக் அடிப்படையில் செயல்படவில்லையென்றாலும் அவர்கள் இப்போது அவர்கள் குர்ஆன் கூறும் அந்த தலாக் முறையை படிப்படியாக கடைப்பிடிக்கத் துவங்கி விட்டார்கள். இது விஷயத்தில் முஸ்லிம் சமுதாயம் அந்நிய தலையீடு இல்லாமல் தன்னை தானே மாற்றிக் கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றது. ஆனால், இன்றைய இந்திய நாட்டில் மத்தியில் ஆளுகின்ற முஸ்லிம் விரோத பாஜக அரசு இதை ஒரு சாக்காக பயன்படுத்திக் கொண்டு குர்ஆன் கூறும் தலாக் சட்டத்தில் தனது மூக்கை நுழைத்து தலையீடு செய்திருக்கின்றது. இதை நாம் அனுமதித்தால் இந்திய அரசியல் சட்டம் நமக்கு வழங்கியுள்ள முஸ்லிம் தனியார் சட்ட உரிமையை நாம் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

திருமணம், விவாகரத்து, சொத்துரிமை உள்ளிட்ட விவகாரங்களில் திருக்குர்ஆன் மற்றும் திருத்தூதர் (ஸல்) அவர்களின் போதனைகளைப் பின்பற்றி வாழமுடியாத நிலைக்கு பாஜக அரசு முஸ்லிம்களைத் தள்ளிவிடுகின்றது.

இலட்சக்கணக்கில் பணத்தை செலவழித்து இலட்சக்கணக்கான மக்கள் கூடி திருக்குர்ஆன் மாநாடு நடத்துகின்றநாம், திருக்குர்ஆனுக்கு எதிரான இந்த அநியாயத்தைத் தட்டிக்கேட்கவில்லை என்றால் இம்மாநாடு நடத்துவதில் ஓர் அர்த்தம் இல்லாமல் ஆகிவிடும். அது திருக்குர்ஆனுக்கு இழைத்த அநீதியாகவும் ஆகிவிடும்.

நீ வாழும் நாட்டில் ஆளும் இந்துத்துவா கூட்டம் என் சட்டத்திற்கு எதிராகக் கிளம்பியபோது, நீ வாய்திறந்து குரல் கொடுக்கமால், தட்டிக்கேட்காமல் ஏன் மவுனம் காத்தாய்?

என்று அந்தக் குர்ஆன் நாளை மறுமையில் கேட்டால் அதற்குப் பதிலளிக்காமல் நாம் ஆகிவிடக்கூடாது!

இன்று இந்துத்துவா சக்திகள் தலாக் சட்டத்தில் உள்ளே நுழைந்திருக்கின்றது. நாளை பலதாரமணம் அடுத்து பாகப்பிரிவினை, அதற்கு அடுத்து ஜனாஸா அடக்கம் அதாவது முஸ்லிம்கள் தங்கள் ஜனாஸாக்களை புதைக்கக்கூடாது; இந்துக்களின் முறைப்படி எரிக்கத்தான் செய்ய வேண்டும் என்று தனியார் சட்டங்களில் படிப்படியாகக் கைவைக்க இறங்கிவிடுவார்கள். சங்கப்பரிவாரங்களின் பட்டியலில் இந்தச் செயல்திட்டங்கள் அனைத்தும் இடம்பெற்றிருக்கின்றன. இதற்கு அவர்கள் சூட்டியிருக்கும் மறுபெயர்தான் பொது சிவில் சட்டம்.

மொத்தத்தில் இந்திய அரசியல் சட்டத்தில் முஸ்லிம் தனியார் சட்டம் என்ற பெயரில் அளிக்கப்பட்டிருப்பவை நான்கே நான்கு தான். திருமணம், விவாகரத்து, பாகப்பிரிவினை, ஜனாஸா அடக்கம் என்ற இந்த நான்கு உரிமைகளை பொது சிவில் சட்டம் என்ற பெயரில் முஸ்லிம்களிடமிருந்து பறிப்பதற்குப் பல கட்ட முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அதில் முதல் கட்டமாக தலாக் சட்டத்தில் நுழைந்திருக்கின்றனர். இவற்றை நம்மிடமிருந்து பறிப்பதின் மூலம்இந்தக் குர்ஆனை நம்மிடமிருந்து பிரித்து விட இந்துத்துவா சக்திகள் துடிக்கின்றனர்.

1882ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அந்நாட்டு பிரதம அமைச்சர் கிளாட்ஸ்டோன், எகிப்தில் பிரிட்டனின் ஆட்சியைத் தொடர வேண்டும் என்றால் முஸ்லிம்களின் பலத்தை உடைக்க வேண்டும் என்று சொன்னார். மேலும் அதற்கான வியூகத்தைப் பற்றிப் பேசும்போது, திருக்குர்ஆனைத் தூக்கிப் பிடித்தவாறு அவர் குறிப்பிட்டதாவது: ‘‘எகிப்து முஸ்லிம்களிடம் இந்த குர்ஆனை இருக்கின்ற வரை, அதை அவர்கள் மதித்துப் பின்பற்றுகின்ற வரை நாம் அவர்களிடம் ஆதிக்கம் செலுத்தவே முடியாது. இதற்குரிய ஒரே ஒரு தீர்வு முஸ்லிம்களைத் திருக்குர்ஆனை விட்டும் பிரிப்பது மட்டும் தான்’’

இது எதை உணர்த்துகின்றது? உலகமெங்கும் உள்ள இஸ்லாத்தின் எதிரிகள் முஸ்லிம்களை வீழ்த்துவதற்குக்கையில் எடுக்கும் ஒரே ஆயுதம் திருக்குர்ஆனை விட்டும் அவர்களைப் பிரிப்பது தான். அந்த ஆயுதத்தைத் தான் சங்பரிவாரங்கள் கையில் எடுத்திருக்கின்றனர். அதன் எதிரொலிதான் முத்தலாக் சட்டமாகும்.

## முத்தலாக் சொன்னால் மூன்றாண்டு சிறை வாசம்!

நாடாளுமன்றத்தில் நிறைவேறிய இந்த முத்தலாக்தடைச்சட்டம் ராஜ்சபாவில் நிறைவேறாமல் முடங்கியது. அதனால் அதற்கு உயிர் கொடுக்கும் விதமாக ஓர் அவசரச் சட்டத்தை மத்திய காவி அரசாங்கம் பிறப்பித்திருக்கின்றது. முஸ்லிம் பெண்களைக் காக்கவே இந்தச் சட்டம் என்று மோடி வகையறா சொல்கின்றது. ஆனால் முஸ்லிம் ஆண்களையும் பெண்களையும் கொடுமைப்படுத்தும் சட்டமாக இந்தச் சட்டம் அமைந்திருக்கின்றது.

1. முத்தலாக் விட்டவருக்கு மூன்றுஆண்டுகள் சிறைத் தண்டனை

2. கைது செய்யப்பட்ட கணவன் போலிஸ் ஸ்டேஷன் ஜாமினில் வெளிவர முடியாது. மாஜிஸ்ரேட் தான் ஜாமீனில் விட முடியும்.

3. கணவன் கைது செய்யப்பட்டதால் அதுவரையில் அவனது வருவாயில் வாழ்ந்த மனைவியும் பிள்ளைகளும் வருவாய்க்கு வழியின்றி வறுமையில் வாடும்நிலைஏற்படும்.

இவை இந்தச் சட்டம் கொண்டிருக்கின்ற கொடுமையான பிரிவுகளாகும். அத்துடன் இந்த சட்டம் முரண்பாடுகளின் ஒட்டுமொத்த உருவமாக உள்ளது.

## முத்தலாக் சட்டமா? முரண்பாடுகளின் உருவமா?

முத்தலாக் சொன்ன கணவனை சிறையில் அடைத்து விட்டு, அவனிடம் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஜீவனாம்சம் வழங்க வேண்டும் என்று சொல்வது.சிறையில் அடைக்கப்பட்ட கணவன் சம்பாதிக்க முடியாத போது அவன் எப்படி மனைவிக்கும் மக்களுக்கும் ஜீவனாம்சம் கொடுக்க முடியும்?

ஒரே நேரத்தில் கணவன்முத்தலாக் என்று சொன்னால் அது செல்லாது என்று இந்த சட்டம் சொல்கின்றது. எப்போது செல்லாது என்று ஆகி விட்டதோ அப்போதே கணவன் மனைவிக்கு மத்தியில் உறவு முறியவில்லை; திருமண உறவு தொடர்கின்றது என்பது தான் அதன் அர்த்தம். பின்னர் எதற்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை என்று நாம் மட்டுமல்ல! அறிவுஜீவிகள் அனைவரும் கேட்கின்ற கேள்விக்கு மூளைகெட்ட மோடி அரசு பதில் அளிக்க மறுக்கின்றது.

இப்படிப்பட்ட முரண்பாடுகளைக் கொண்ட இந்த சட்டத்தை முஸ்லிம்களின் மீது அவசர அவசரமாகத் திணித்து அவர்களைத் தண்டிக்கத் துடிப்பதற்கு ஒரே ஒரு காரணம் அவர்களை இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து, அதாவது குர்ஆனிலிருந்து பிரிப்பது தான். அதற்கு ஒரு வெள்ளோட்டமாகத் தான் தலாக் சட்டத்தை எடுத்திருக்கின்றனர்.

குர்ஆன் சட்டங்களில் உள்ளே நுழைவதற்கு தலாக் சட்டத்தை ஒரு தலைவாசலாகப் பார்க்கின்றார்கள். அவர்கள் தலைவாசலில் எட்டிப்பார்க்கும் போது அவர்களை தலை தெறிக்க ஓடவைக்க வேண்டுமென்றால் சமுதாயம் ஒட்டுமொத்தமாகத் திரண்டு தனது எதிர்ப்பைப் பதிய வைக்க வேண்டும். திருக்குர்ஆனை நோக்கி மக்களை அழைக்கும் முக்கியமான பணியுடன், காவி அரசாங்கத்தை எச்சரிப்பதையும் ஒரு லட்சியமாகக் கொண்டு இம்மாநாடு இன்ஷா அல்லாஹ் நடத்தப்படவுள்ளது.

ஏற்கனவே, இந்துத்துவா சக்திகள் முஸ்லிம்களை இனரீதியில் அழிப்பதற்குரிய திட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். பசுவின் பெயரால் முஸ்லிம்களை அடித்து கொலை செய்வதுஅதன் ஓரம்சம் தான்.

இந்தியாவில் குர்ஆன் கூறும் ஏகத்துவத்தை நிலைநிறுத்தும் நினைவுச் சின்னங்களாக நிற்பவை அல்லாஹ்வின் ஆலயங்கள். இந்துத்துவா சக்திகள், நீதிமன்றத்தின் உத்தரவை மீறி அந்த ஆலயங்களில் ஒன்றான பாபரி மஸ்ஜிதைத் தகர்த்து தரைமட்டமாக்கியிருக்கின்றனர். இப்போதும் நீதிமன்றத்தின் உத்தரவிற்குக் காத்திரமாலேயே அங்கு ஒரு கோயிலை எழுப்ப அனைத்துக் கட்ட முயற்சிகளையும் எடுக்கின்றனர். அதற்கெதிராகவும் இந்த மாநாடு இன்ஷா அல்லாஹ் தனது அழுத்தமான ஆட்சேபணையையும் கண்டனக் குரலையும் பதிவு செய்யவிருக்கின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவில் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள் அன்றாட நடவடிக்கைகளாகி விட்டன. அண்மைக் காலத்தில் பால்முகம் மாறாத, பச்சிளம் சிறுமியர் கூட பாலியல் வேட்டைக்கும் வேட்கைக்கும் பலியாக்கப்படுகின்றனர். ஈவு இரக்கமின்றி கொலை செய்யப்படுகின்றனர். பதற வைக்கின்ற, பதைபதைக்க வைக்கின்ற இந்தக் குற்றங்களுக்கு அரபு நாட்டுத் தண்டனை தான் தீர்வு என்று நடுநிலைவாதிகளிடமிருந்து குரல்கள் ஒலிக்கின்றன.

## அது அரபு நாட்டு தண்டனை அல்ல! அல்குர்ஆனின் தண்டனை!

ஆம்! அல்குர்ஆன் இத்தகையவர்களுக்கு அளிக்கின்ற தீர்ப்பும் தண்டனையும் மரண தண்டனை தான். இதோ அல்குர்ஆன் சொல்கின்றது.

உயிருக்கு உயிர், கண்ணுக்குக் கண், மூக்குக்கு மூக்கு, காதுக்குக் காது, பல்லுக்குப் பல், காயங்களுக்குப் பதிலாக அதே அளவு காயப்படுத்துதல் ஆகியவற்றை அதில் (தவ்ராத்தில்) அவர்களுக்கு விதியாக்கினோம்.

அல்குர்ஆன் 5:45

இன்றைய இந்தியாவின் சட்டம் ஒழுங்குசீராகி, அமைதிஏற்படுவதற்கு அல்குர்ஆன் மட்டுமே தீர்வு என்பதைப் பகிரங்கமாக உணர்த்தவே இந்தத் திருக்குர்ஆன் மாநாடு.

திருக்குர்ஆன் மாநாட்டிற்கு வருவதற்கானஅடுத்தக்கட்ட ஏற்பாடுகளைச் செய்ய உங்களை அன்புடன் தவ்ஹீத் ஜமாஅத் கேட்டுக் கொள்கின்றது.

அனைவரையும் குடும்பத்துடன் அன்போடு அழைக்கிறது...

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ)

